# கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் மொழித்திறன் விருத்தி ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் ஏற்படுத்தும் செல்வாக்கு

Rajandran Thakshaayini

*Senior Lecturer, Department of Education and Childcare,*

*Address: No 24 Cyrill lane, Batticaloa, Sri Lanka*

**ஆய்வுச் சுருக்கம்**

மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறனாக அமைவதற்கு அவர்களிடம் காணப்படுகின்ற மொழித்திறன் விருத்தி பெரும் பங்காற்றுகின்றது. ஆனால் இம் மொழித்திறன் விருத்தியானது அனைத்து மாணவர்களிடமும் ஒரே மாதிரியாகக் காணப்படுவதில்லை. அந்தவகையில் கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் மொழித்திறன் பின்னடைவு ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது ஆய்வு செய்யப்படுகின்றது.

ஆய்வினை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு கல்வி வலயத்தில் மண்முனை வடக்கு கோட்டத்தில் காணப்படும் பாடசாலைகளிலிருந்து வசதி மாதிரியின் அடிப்படையில் ஆறு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அப்பாடசாலைகளில் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதத்தில் 100 மாணவர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் ஆறு அதிபர்களும் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதத்தில் 45 ஆசிரியர்களும் 50 பெற்றோர்களும் தெரிவு செய்யப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. இதனடிப்படையில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆய்வுக் குடித்தொகையினராக கருதப்பட்டு வினாக்கொத்து, நேர்காணல், ஆவணச் சான்றுகள் போன்ற ஆய்வுக் கருவிகளைப் பயன்படுத்தி வினாக்கள் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் வினவப்பட்டு பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள்,சலாகை வரைபுகள் மூலம் காட்டப்பட்டதுடன் போதியளவு வியாக்கியானமும் விதப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் மொழித்திறன் பின்னடைவினால் கற்றலின் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மாணவர்கள் தெளிவாக வாசிக்காமை, எழுத்துத் திறன் குறைவு, கிரகித்தலில் இடர்படுதல், பேசுதலில் சிரமப்படுதல் போன்றவற்றை வெளிக்காட்டினார்கள். இத்தகைய நிலையானது ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் சிரமங்களை ஏற்படுத்துகின்றது. மாணவர்களின் கற்றலில் பெற்றோர்களின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது. இதன் பின் முடிவுகளும் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்**

மொழித்திறன், கனிஷ்ட இடைநிலை, கற்றல், வினைத்திறனான கற்பித்தல்

### 1.1ஆய்வின் அறிமுகம்

கல்வியைக் கற்கின்ற போது ஒருவரிடத்தில் மொழித்திறன் விருத்தி ஏற்படுகின்றது. இம்மொழித்திறன் விருத்தி எல்லோரிடத்திலும் ஒரே மாதிரியாகக் காணப்படாது. ஆளுக்காள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இங்கு

மொழித்திறன் விருத்தியானது எழுத்துத் திறன், வாசிப்புத் திறன், செவிமடுத்தல் திறன், பேச்சுத் திறன் என வகைப்படுத்தி நோக்கப்படுகின்றது.இத்தகைய மொழித்திறன் விருத்தியடைந்து காணப்படுகின்ற போது ஆசிரியர் பாடவிடயத்தை சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல முடிகின்றது. மொழித்திறன் விருத்தியில் பின்னடைவான மாணவர்கள் கற்றலில் பின்தங்குகின்றனர். இம் மாணவர்கள் சுய எழுத்தாற்றல் இன்மை, புதிய விடயங்களை உள்வாங்கிக் கொள்ள முடியாதவர்களாகவும் புதிய விடயங்களை அறிந்து கொள்ள முடியாதவர்களாகவும் புதிய விடயங்களை அறியும் ஆர்வம் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் ஆசிரியர் சிறந்த முறையில் கற்பித்தலை குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க முடியாமல் பல சிரமங்களை எதிர்கொள்கின்றார்.

மொழித்திறன் பின்னடைந்த மாணவர்களின் ஈடுபாடற்ற கற்றல் முயற்சிகளினால் வகுப்பாசிரியர்கள், பாட ஆசிரியர்கள் சிரமப்படுவதுடன் அலகு முன்னேற்றம், முறையான கலைத்திட்ட அமுலாக்கம், வினைத்திறனான வகுப்பறைச் செயற்பாடுகளை திருப்திகரமாக மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படுகின்றது.இவ்வாய்வின் மூலம் மொழித்திறன் விருத்தியில் பின்னடைந்த மாணவர்களை இனங்காண்பதோடு இவர்களின் மொழித்திறன் விருத்தி பின்னடைவானது ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்துகின்றது என்பதை மதிப்பிடுவதாக இவ்வாய்வின் அறிமுகமானது அமையப் பெற்றுள்ளது.

### 1.2 ஆய்வின் பின்னணி

பொதுவாக இலங்கையில் மாணவர்களின் பாடசாலைக் காலமானது தரம் 1 இல் ஆரம்பித்து தரம் 13 வரை கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. மாணவர்கள் ஆரம்பப் பிரிவில் முதன்மை நிலை 1, முதன்மை நிலை 2, முதன்மை நிலை 3 ஆகிய நிலைகளைக் கடந்தே கனிஷ்ட இடைநிலைப் பிரிவில் நுழைகின்றனர். இப்பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களின் ஒரு குறிப்பிட்ட தொகையினர் மொழித்திறனில் பின்னடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இம் மாணவர்களுக்குக் கற்பிக்கும் அனைத்துப் பாட ஆசிரியர்களும் கற்பித்தலில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பெற்றோர்கள் கல்வியறிவு குன்றியவர்களாகவும் பிள்ளையின் கல்வி மீது அக்கறை கொள்ளாதவர்களாகவும் குடும்ப வறுமை காரணமாக பெற்றோர்கள் வெளிநாடு செல்வதனாலும் பிள்ளைகளின் மொழித்திறன் விருத்தி குறைவடைகின்றது. இத்தகைய பிள்ளைகள் கற்றலில் ஆர்வமில்லாமல் இருக்கின்றார்கள். ஆசிரியர் கற்பிக்கும் போது அதில் கவனம் செலுத்தாமல் இருக்கின்றார்கள். இதனால் ஆசிரியர் பாடவிடயங்களை சிறப்பாகக் கற்பிக்க முடியாதுள்ளது.

இன்றைய சூழலில் மாணவர்கள் தங்களது அதிக நேரத்தை தொழிநுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதிலும் பிரத்தியேக வகுப்புக்களிலும் செலவிடுவதனால் புத்தகங்களை வாசித்தல், ஆக்கங்களை எழுதுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவது மிகக் குறைவாகவே உள்ளது. வகுப்பறைக் கற்றலில் புதிய விடயங்களை அறியவோ, புதிய ஆக்கங்களைப் படைக்கவோ முடியாது சிரமப்படுகின்றனர். மாணவர்கள் தொலைக்காட்சியை அதிகம் பார்வையிடுவதனாலும் இணையத்தைப் பாவிப்பதனாலும் இவர்களிடம் வாசிப்புத் திறன், எழுத்துத் திறன் குறைவடைந்து செல்கின்றது. இம் மாணவர்களிடம் பாடவிடயம் தொடர்பான செயற்பாடுகளை ஆசிரியர் கொடுக்கும் போது சரியாகச் செய்யாமல் இருக்கின்றனர். இதனால் ஆசிரியர் விசேட குறிக்கோளை அடைவதில் சிரமப்படுகின்றார்.

### 1.3 ஆய்விற்கான நியாயம்

எழுதுதல்,வாசித்தல், செவிமடுத்தல், பேசுதல் போன்றவற்றின் அவசியத்தை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் புலப்படுத்த வேண்டியுள்ளதோடு இம் மொழித்திறன் விருத்தியில் மாணவர்கள் பின்தங்கியிருப்பதற்கான காரணங்களை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவும் முடியும்.

வகுப்பறையில் ஆசிரியர்கள் கற்பிக்கும் போது மாணவர்களின் மொழித்திறன் விருத்தியை வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் இடர்படுகின்ற மாணவர்களை சரியான முறையில் இனங்கண்டு அவர்களுக்கான பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளவும்மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த முயற்சிக்கும் ஆசிரியருக்கு உதவும் வகையில் அம்மாணவர்களுடன் கலந்துரையாடி மொழித்தேர்ச்சிக்கு உதவக் கூடிய செயற்பாடுகளை வழங்கவும் முன்னெடுக்கவும் பிள்ளைகளின் மொழித்திறன் விருத்தியில் முன்பள்ளிகள் மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியரின் பணிகள் எந்தளவிற்கு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது பற்றி அறிவதற்கும் இவ்வாய்வு அவசியமாகின்றது.

மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களின் அடைவுமட்ட வீழ்ச்சி, ஆர்வமற்ற நிலை என்பவற்றை சீர்திருத்துவதுடன் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்று தமது தேவையை நிறைவேற்ற பிறர் மீது தங்கியிராது சுயமாக முன்னேற வழிவகைகளை மேற்கொள்வதற்கும், தமது பலம், பலவீனம், விருப்பங்கள், ஆளுமை போன்றவற்றை விளங்கிக் கொள்வதற்கும், பொருத்தமான வகையில் தமது தகைமையை வளர்த்துக் கொள்ளவும் மாணவர்களின் இடைவிலகலை குறைத்து பாடசாலைக்கு வருகை தருவதை ஊக்குவிக்கவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகின்றது.

### 1.4 ஆய்வுப் பிரச்சினை

ஆசிரியர் தனக்கு வழங்கப்பட்ட 40 நிமிடங்களில் அனைத்து மாணவர்களுக்கும் ஏற்ற வகையில் கற்பித்தலை மேற்கொள்வது என்பது வகுப்பறை மட்டத்தில் எழும் பிரச்சினையாக உள்ளது.ஆசிரியர் பாடத்தை திட்டமிடுகின்ற போது வெவ்வேறாகத் திட்டமிட வேண்டியுள்ளது.இதனால் ஆசிரியரின் வேலைப்பழு அதிகரிக்கின்றது. 40 நிமிடப் பாட வேளையில் பொதுக் கலைத்திட்டத்திற்கேற்ப சாதாரண மாணவர்களுடன் மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களின் கற்பித்தலை மேற்கொள்ள முடியாமல் ஆசிரியர்கள் இடர்படுகின்றனர்.ஆசிரியர்கள் மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களுக்கு வழமையை விட அதிக நேரம் செலவிட வேண்டி உள்ளதனால் குறிப்பிட்ட காலப்பகுதியில் பாடத்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது.மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தராத போது ஆசிரியர் திட்டமிட்டபடி கற்பித்தலை மேற்கொள்ள முடியாது,ஒழுங்காகக் கற்பிப்பதில்லை என்ற அவப்பெயர், பாடசாலையில் அதிபருடன் மாணவருடன் முரண்பாடு, புதிய வழிவகைகளைக் கையாண்டு கற்பிக்க முடியாமை எனப் பல சிரமங்களை ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்றனர்.

பாடப்பரீட்சைகள் மற்றும் தவணைப் பரீட்சைகள் போன்றவற்றின் போது மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்கள் பரீட்சைகளில் வினாக்களுக்கு விடையளிக்காது இருத்தல், மிகவும் குறைவான புள்ளிகளைப் பெறுதல் போன்றவை இடம்பெறுகின்றன. மாணவர்கள் குறைவான புள்ளிகளைப் பெறுவதனால் சிறப்பான அடைவுமட்டத்தைக் காட்ட முடியாமல் பெரிதும் சிரமத்தை எதிர்கொள்கின்றார்.

### 1.5 ஆய்வின் நோக்கம்

#### பொது நோக்கம்

கனிஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் மொழித்திறன் விருத்தி ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் ஏற்படுத்தும் செல்வாக்கைக் கண்டறிதல்.

#### சிறப்பு நோக்கங்கள்

1. எழுதுதல்,வாசித்தல், கிரகித்தல், பேசுதல் போன்றவற்றில் இடர்படும் மாணவர்களைக் கண்டறிதல்.

2. இம் மாணவர்களின் மொழித்திறன் பின்னடைவிற்கான காரணங்களைக் கண்டறிதல்
3. மாணவர்களின் மொழித்திறன் விருத்திக் குறைபாட்டால் ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தல் எவ்வாறு பாதிப்படைகின்றது என்பதைக் கண்டறிதல்.
4. இப் பிரச்சினைக்கான தீர்வினைக் கண்டறிந்து பரிகார செயற்பாடுகளையும் வழிமுறைகளையும் முன்வைத்தல்.

**2.0 இலக்கிய மீளாய்வு**

Ndikumwami Mary(2013)இல் தன்சானியாவில் மேற்கொண்ட ஆய்வில் கற்றல் இடர்பாடுடைய மாணவர்களால் ஆசிரியர்கள் வகுப்பறையில் அதிகளவான வேலைப்பழுவிற்கு உள்ளாகின்றனர் எனக் கூறியுள்ளார்.

ஷோபா (2014) ஆய்வு முடிவில் மாணவர்கள் தொடர்ச்சியாக எழுத, வாசிக்கத் தெரியாத நிலையில் கற்றலில் ஓர் அசமந்தப் போக்கினையே வெளிப்படுத்துவதனால் ஆசிரியர்கள் வினைத்திறனான கற்பித்தலை மேற்கொள்வதில் பெரும் சவாலை எதிர்நோக்குகின்றனர் எனக் கூறியுள்ளார்.

Dayna Doskocil (2018) மேற்கொண்ட ஆய்வில் மொழித்தேர்ச்சிக் குறைபாடு உடைய மாணவர்கள் எல்லாப் பாடங்களிலும் குறைவான புள்ளிகளையே பெறுவதனால் ஆசிரியர் சிறப்பான அடைவுமட்டத்தினை ஏற்படுத்த முடியாமல் பெரிதும் சிரமப்படுகின்றார் எனக் கூறியுள்ளார்.

**3.0 ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வு முறையியலினுள் ஆய்வின் பொது நோக்கம்,சிறப்பு நோக்கங்கள் இனங்காணப்பட்டு ஆய்விற்கான பிரதேசம், ஆய்வின் சனத்தொகை பற்றிய வினாக்கள் பெறப்பட்டு அதன் பின்னர் மாதிரித் தெரிவு எவ்வாறு இடம்பெறுகின்றது என்பது பற்றியும் தகவல்களைப் பெறுவதற்கு எத்தகைய ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்படும் அதன் நம்பகம், தகுதி எவ்வாறு காணப்படும் தரவுப் பகுப்பாய்வினை எவ்வாறு மேற்கொள்ள முடியும் எனும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் மொழித்திறன் விருத்தி ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் ஏற்படுத்தும் செல்வாக்கு எனும் ஆய்வுத் தலைப்பானது மண்முனை வடக்குக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்வதற்கு அளவை முறை ஆய்வு பின்பற்றப்படுகின்றது. இதன் அடிப்படையில் இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து,அவதானம்,ஆவணச் சான்றுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் போன்றோரிடமிருந்து வினாக்கொத்தின் மூலமாகவும் அதிபரிடமிருந்து நேர்காணல் மூலமாகவும் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்விற்கு உட்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**3.1 மாதிரித் தெரிவு**

ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட மண்முனை வடக்குக் கோட்டத்தில்1AB பாடசாலைகள் எட்டும், 1C பாடசாலைகள் நான்கும், வகை II பாடசாலைகள் பதினேழும், வகை III பாடசாலைகள் பத்தும் என மொத்தமாக 39 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவ்வாய்விற்காக தூரம், போக்குவரத்துப் பிரச்சினை என்பவற்றைக் கருத்திற் கொண்டு வசதி மாதிரியின் அடிப்படையில் ஒரு 1C பாடசாலையும் ஐந்து வகை II பாடசாலைகளும் அடங்கலாக மொத்தமாக ஆறு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

ஆய்வின் நோக்கம் கருதி 6 பாடசாலைகளிலிருந்தும் அதிபர்கள் ஒவ்வொருவரும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 6 பாடசாலைகளிலிருந்தும் கனிஷ்ட இடைநிலையில் கற்பிக்கும் 90 ஆசிரியர்களில் இருந்து 2:1 எனும் விகிதத்தின் அடிப்படையில் 45 ஆசிரியர்கள் இலகு எழுமாற்றுத் தெரிவின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.கனிஷ்ட இடைநிலையில் கல்வி கற்கும் மாணவர்களில் மொழித்திறன் பின்னடைவான மாணவர்களின் தொகை 200 இல் இருந்து ஆய்விற்காக 2:1 எனும் விகிதத்தின் அடிப்படையில் 100 மாணவர்கள் இலகு எழுமாற்று மாதிரியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பெற்றோர்களின் மாதிரித் தெரிவானது ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களின் பெற்றோர்கள் 2:1 எனும் விகிதத்தில் 50 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


### 3.2 தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்

ஆய்வுக்கான தரவுகளைச் சேகரித்த பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடு தரவுப் பகுப்பாய்வு ஆகும். இத் தரவுப் பகுப்பாய்வின் மூலமே பிரச்சினைகள் கண்டறியப்படுகின்றன. இத் தரவுப் பகுப்பாய்வானது பல்வேறு படிமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவுகளை நிரற்படுத்தி பகுப்பாய்வு செய்வதன் மூலம் அவை முக்கியமான தகவல்களாக மாற்றமடையும். எனவே பகுப்பாய்வானது நேர்த்தியாகவும் தெளிவானதாகவும் இடம்பெற வேண்டியது அவசியமானதாகும். இவ் ஆய்வில் தரவுப் பகுப்பாய்வு முறைகளாக அளவுசார் முறையும், பண்புசார் முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடமிருந்து வினாக்கொத்தின் மூலம் திரட்டப்பட்ட தரவுகளும் அதிபரிடமிருந்து நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளும் ஆவணச் சான்றுகளை பார்வையிடுவதன் மூலமாகப் பெறப்பட்ட தரவுகளும் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு எண்சார் தகவல்களாக மாற்றப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணையாக்கம், சலாகை வரைபுகள் ஊடாக புள்ளிவிபரங்களின் வாயிலாக விளக்கப்படுகின்றது. பகுப்பாய்வுக்காக Microsoft Excel முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 4.0 தரவுப் பகுப்பாய்வு முடிவுகள்

### 4.1 எழுதுதல்,வாசித்தல், கிரகித்தல்,பேசுதல் இடர்பாடுகள்




**உரு. 4.1 எழுதுவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள்.**


எழுதும் போது இடர்படுகின்றீர்களா? எனும் வினாவை மாணவர்களிடம் வினவிய போது 80 சதவீதமான மாணவர்கள் ஆம் என்ற பதிலையும் 20 சதவீதமான மாணவர்கள் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்தனர்.ஆசிரியர்களிடம் வினவிய போது 89 சதவீதமான ஆசிரியர்கள் ஆம் எனும் பதிலையும் 11 சதவீதமான ஆசிரியர்கள் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்திருந்தனர்.பெற்றோர்களிடம் வினவிய போது 70 சதவீதமான பெற்றோர்கள் ஆம் என்ற பதிலையும் 30 சதவீதமான பெற்றோர் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்திருந்தனர்.

International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)


Volume: 02 Issue: 04 October to December 2020 www.irjtsjournal.org

4.2 மொழித்திறன் பின்னடைவிற்கான காரணங்கள்




**உரு. 4.2குடும்பத்தில் உள்ள படித்தவர்கள் எழுத, வாசிப்பதற்கு உதவுதல்**


வீட்டில் படித்தவர்கள் உங்களுக்கு எழுத, வாசிப்பதற்கு சொல்லித் தருவதுண்டா? என்ற வினாவிற்கு 30 சதவீதமான மாணவர்கள் ஆம் என்ற பதிலையும் 30 சதவீதமான மாணவர்கள் இல்லை என்ற பதிலையும் 40 சதவீதமான மாணவர்கள் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்தனர். இதே வினாவை ஆசிரியர்களிடம் வினவிய போது80 சதவீதமான ஆசிரியர்கள் இல்லை என்ற பதிலையும் 20 சதவீதமான ஆசிரியர்கள் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்தனர். இதே வினாவை பெற்றோர்களிடம் வினவிய போது.30 சதவீதமான பெற்றோர் ஆம் என்ற பதிலையும் 40 சதவீதமான பெற்றோர் இல்லை என்ற பதிலையும் 30 சதவீதமான பெற்றோர் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்தனர்.




**உரு.4.3வீட்டில் கற்பதற்கான வசதிகள் இருத்தல்**


வீட்டில் கற்பதற்கான வசதிகள் போதுமானதாக உள்ளதா? எனும் வினாவிற்கு 30 சதவீதமான மாணவர்கள் ஆம் என்ற பதிலையும் 50 சதவீதமான மாணவர்கள் இல்லை என்ற பதிலையும் 20 சதவீதமான மாணவர்கள் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்தனர். இதே வினாவை ஆசிரியர்களிடம் வினவிய போது 15 சதவீதமான ஆசிரியர்கள் ஆம் என்ற பதிலையும் 60 சதவீதமான ஆசிரியர்கள் இல்லை என்ற பதிலையும் 25 சதவீதமான ஆசிரியர்கள் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்தனர். இதே வினாவை பெற்றோர்களிடம் வினவிய போது25 சதவீதமான பெற்றோர்கள் ஆம் என்ற பதிலையும் 60 சதவீதமான பெற்றோர் இல்லை என்ற பதிலையும் 15 சதவீதமான பெற்றோர் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்தனர்.

**4.3மாணவர்களின் மொழித்திறன் விருத்திக் குறைபாடு ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்**



**4.4பெறுபேற்றின் வீழ்ச்சி நிலை**


தவணைப் பரீட்சைகள், பொதுப் பரீட்சைகளில் சித்திமட்டத்தை எய்துகின்றீர்களா? எனும் வினாவை மாணவர்களிடம் வினவிய போது 20 சதவீதமான மாணவர்கள் ஆம் என்ற பதிலையும் 60 சதவீதமான மாணவர்கள் இல்லை என்ற பதிலையும் 20 சதவீதமான மாணவர்கள் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்தனர். ஆசிரியர்களிடம் வினவிய போது 90 சதவீதமான ஆசிரியர்கள் இல்லை என்ற பதிலையும் 10 சதவீதமான ஆசிரியர்கள் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்தனர். பெற்றோர்களிடம் வினவிய போது 70 சதவீதமான பெற்றோர்கள் இல்லை என்ற பதிலையும் 30 சதவீதமான பெற்றோர்கள் ஓரளவு என்ற பதிலையும் தெரிவித்தனர்.




**உரு. 4.5மொழித்திறன் பின்னடைந்த மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் நேரவளத்தின் செல்வாக்கு**


மொழித்திறன் பின்னடைந்த மாணவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நேரம் போதுமானதாக உள்ளதா? என்ற தூண்டலை ஆசிரியர்களுக்கு வழங்கிய போது 100 சதவீதமான ஆசிரியர்களும் இல்லை என்ற என்ற பதிலையே தெரிவித்தனர்.

**4.4 பரிகாரச் செயற்பாடுகளும் வழிமுறைகளும்**




**உரு.4.6 மொழித்திறனை வளர்ப்பதற்கான பரிகாரச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுதல்**

மொழித்திறன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பரிகாரச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? எனும் வினாவிற்கு 100 சதவீதமான மாணவர்கள் ஆம் என்ற பதிலையே தெரிவித்தனர்.ஆசிரியர்களிடம் வினவிய போது 100 சதவீதமான ஆசிரியர்களும் ஆம் என்ற பதிலையே தெரிவித்தனர்.பெற்றோரிடம் வினவிய போது 100 சதவீதமான பெற்றோர்களும் ஆம் என்ற பதிலையே தெரிவித்தனர்.



**உரு. 4.7 பாடசாலையில் மொழித்திறனை விருத்தி செய்வதற்கு விசேட பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படல்**

பாடசாலையில் மொழித்திறனை விருத்தி செய்வதற்கு விசேட பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றனவா? எனும் வினாவிற்கு 35 சதவீதமான மாணவர்கள் ஆம் என்ற பதிலையும் 65 சதவீதமான மாணவர்கள் இல்லை என்ற பதிலையும் தெரிவித்தனர். 40 சதவீதமான ஆசிரியர்கள் ஆம் என்ற பதிலையும் 60 சதவீதமான ஆசிரியர்கள் இல்லை என்ற பதிலையும் தெரிவித்தனர். 32 சதவீதமான பெற்றோர் ஆம் என்ற பதிலையும் 68 சதவீதமான பெற்றோர் இல்லை என்ற பதிலையும் தெரிவித்தனர்.

## 5.0 தீர்வுகளும் ஆலோசனைகளும்

### 5.1 எழுதுதல்,வாசித்தல், கிரகித்தல், பேசுதல் போன்றவற்றில் ஏற்படும் இடர்பாடுகள்

இம் மாணவர்களுக்கு முன்பள்ளி, ஆரம்பக் கல்வி பருவப் பயிற்சிகள் முறையாகக் கிடைப்பதற்கு பெற்றோர், ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பெற்றோர்கள் பிள்ளையின் கல்வி பற்றி விழிப்புடன் செயற்படுவதுடன் பிள்ளைகளின் கல்வியில் கூடியளவு பங்களிப்புச் செய்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். எழுத்துத் திறனில் பின்னடைவாக உள்ள மாணவர்கள் ஒவ்வொரு நாளும் எழுத்துக்களை இனங்கண்டு திறம்பட எழுதுவதற்கு பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.வாசிப்பிற்கு அடிப்படையாக அமையும் எழுத்துக்களையும் ஒலி வேறுபாடுகளையும் இனங்கண்டு வாசிப்பதற்கான பயிற்சியில் தினமும் ஈடுபட வேண்டும்.கிரகித்தல் தன்மையை அதிகரிக்கும் வகையில் பிள்ளையின் சிறு வயதில் இருந்தே பெற்றோர், குடும்பத்தார் பிள்ளைகளுக்கு சிறிய பயிற்சிகளையும் அவதானிக்கும் திறனையும் ஏற்படுத்த வேண்டும். பாடசாலை மட்டத்தில் பேச்சுப் போட்டிகளை நடாத்துதல் வேண்டும்.

### 5.2 மொழித்திறன் பின்னடைவிற்கான காரணங்கள்

பெற்றோர்கள் பிள்ளையின் நிலையை ஒவ்வொரு நாளும் அவதானித்து எழுதுதல், வாசித்தல், கிரகித்தல் திறனை வளர்ப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.மாணவர்களை நூலகத்திற்குச் செல்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.பெற்றோர் அதிபர், ஆசிரியரைச் சந்தித்து மாணவர்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதுடன் ஆரம்ப நிலையிலேயே வீட்டில் மொழித்திறன் செயற்பாடுகளையும் பயிற்சிகளையும் மேற்கொள்வது அவசியமாகும்.அதிபர், ஆசிரியர்களால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளை பெற்றோர் வீட்டில் செயற்படுத்த வேண்டும். வீட்டில் உள்ள படித்தவர்கள் மாணவர்களின் கற்றலுக்கு உதவி செய்ய வேண்டும்.பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையிலான தொடர்பை அதிகரித்தல் தொடர்பான செயற்றிட்டங்களை அதிபர் முன்னெடுத்தல் வேண்டும்.

### 5.3 மாணவர்களின் மொழித்திறன் விருத்திக் குறைபாடு ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்

ஆசிரியர்கள் தமது அர்ப்பணிப்புடன் தமது பணியில் ஈடுபடுவதற்கு பாடசாலைச் சமூகம் போதிய வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.மேலதிகாரிகள் வழங்குகின்ற அளவுக்கதிகமான காகித வேலைகளை குறைத்து ஆசிரியரின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.ஆசிரியர்கள் நேர முகாமைத்துவக் கொள்கைகளைப் பின்பற்றி பரிகார நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.மாலை நேர வகுப்புக்கள், கற்றல் அணுகுமுறைகள் என்பன சிறப்பாக அமைய வேண்டும்.ஆசிரியர்கள் மாணவர் விரும்பக் கூடிய கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.கல்வி பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

5.4 பரிகாரச் செயற்பாடுகளும் வழிமுறைகளும்

மாலை நேர வகுப்புக்கள், கற்றல் அணுகுமுறைகள் என்பன சிறப்பாக அமைய வேண்டும்.ஆசிரியர்கள் மாணவர் விரும்பக் கூடிய கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதுடன்பரிகாரச் செயற்பாடுகளின் போது மாணவர்களை பரிசு, பாராட்டுக்கள் வழங்கி ஊக்கப்படுத்துவதுடன் ஆசிரியர் மாணவரின் விருப்பு வெறுப்பிற்கேற்பவும் அவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையிலும் மொழிப்பாடத்தைக் கற்பிப்பதுடன் மாணவர்களை புத்தகம், பத்திரிகை வாசித்தல், நற்சிந்தனை கூறச் செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஊக்குவிக்க வேண்டும். பிள்ளைகள் ஆரம்பத்தில் மொழித்திறனைப் பெற்றுக் கொள்ளும் வகையில் முன்பள்ளிகளை சிறப்பாக முன்னெடுத்தல் வேண்டும்.மாணவர்களுக்கு ஆரம்ப காலத்திலிருந்தே மொழித்திறன் விருத்திக்கான பிரத்தியேக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.மொழித்திறன் உடைய ஆசிரியர்களைக் கொண்டு பாடசாலையில் மாணவர்களின் மொழித்திறனை வளர்ப்பதற்கான குழு ஒன்று அமைப்பதுடன் குழுவை அதிபர் வழிநடாத்துவதோடு ஊக்குவிப்பும் வழங்க வேண்டும்.

## Reference


[1] Ann O Quigley, 2000. ***Listening to Childrens Views***, Joseph Rowntree foundation.

[2] Arafat Hamouda, 2013. ***An Investigation of Listening Comprehension Problems Encountered by Saudi students in the EL Listening Class room*.**

[3] Amin Ali Almubark, 2016. ***Exploring The Problems Faced by The Teachers in Developing Writing Skills*,** Jazn university, Saudi Arabia.

[4] Anabela Malpique and Deborah pinco, 2017**. *To empower students with effective writing skills, handwriting matters.***

[5] Bruce Tomblin, 2010. ***Literacy as an outcome of Language Development and its Impact on children's Psychosocial and Emotional Development***, University of Lowa, USA.

[6] Catherine S. Tamis-Lemonda and Eileen T. Rodriguez, 2009.***Parent Role in Fostering young children's Learning and Language Development***, New York University, USA.

[7] Clermont Gauthier and Marital Dembele, 2004.***Quality of Teaching and Quality of Education Laval University***, Quebec, Canada.

[8] Child Dev, 2011. ***Article information***, University of Pittsburg.

[9] Deborah Loewenberg Ball and Francesca M. Forzani, 2009.***The Work of Teaching and the Challenge for Teacher Education***, SAGE journals.

[10] Erick Pakulak, 2010. ***Biological Bases of language Development***, University of Oregan, USA.

[11] Frances L. Van Voorhis and Michelle F. Maier, 2003.***The Impact of Family involvement on the Education of Children.***

[12] Joseph Beitchman, 2010. ***Language Development and its Impact on children's Psychosocial and Emotional Development***, University of Toronto, Cannada.

[13] Judith Johnston, 2010. ***Factors that Influence Language Development***, University of British Colombia, Canada

[14] James Ko and Pamela Sammons, Linda Bakkum, ***Effective teaching, Hong Kong institute Education.***

[15] Julie Nelson., et.al, 2017. ***Measuring Teachers***, Research Engagement.

[16] Julian Hermida, 2009. ***The Importence of Teaching Academic Reading Skills in First year University Courses***, Algoma University, Canada.

[17] Josephine Atieno ogano, 2012.***Teaching with Reading and Writing Problems in the Classroom***, University of Oslo.

[18] Kathy Theimann and Steven F. warren. 2010. ***Programs Supporting young children's Language Development***, University of Kansas, USA.

[19] Karen L. Sanfed,2015. ***Factors that effect the reading comprehension of Seceretery students with Disabilities***, University of Sanfrancisco.

[20] Kamonpan Boonkit, 2010. ***Enhancing the development of speaking skills for non- native Speakers of English silpakorn university***, Thailand.

[21] Kristin Stanberry, ***Undersanding Language Development in Preschoolers***.

[22] Lulgl Girolametto, 2010. ***Services and Programs Supporting young children's Language Development***, University of Toronto, Canada.

[23] Laura.M.Justice, 2016. ***Literacy as an outcome of Language Development and its Impact on children's Psychosocial and Emotional Development***, University of Verginia, USA.

[24] Laraib Nasir., et al. 2013. ***Enhancing Students Creative Writing Skills: An Action Research Project.***